திரு. துரைமுருகன் : இங்கிருந்து வெளிநாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுக்குழுக்களை அனுப்ப வசதியில்லை என்றார்கள். வெளிநாடுகளுக்கு அனுப்பாவிட்டாலும் இந்தியாவிலேயே உள்ள மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தியாவிற்குள் இருக்கும் மற்ற மாநிலங்களுக்கு அனுப்பலாம். இப்போதே பல்வேறு சட்ட மன்றக் குழுக்கள் பல மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படியே அனுப்பப்படுவதாக இருந்தாலும் சட்டசபைக்குப் புறம்பாக உள்ள குழுவாகத்தான் இருக்க முடியும் என்பதை திரு. துரைமுருகனுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : மாணவர்களுடைய நல்லெண்ணக் குழுவை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் பொது அறிவை அவர்கள் பெருக்கிக் கொள்ள வழியேற்படும். அதனால் பிற்காலத்தில் சமுதாயத்திற்குப் பயன் கிடைக்கும். ஆகவே கஷ்டத்தையோ, செலவையோ பார்க்காது வெளிநாடுகளுக்கு அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது வெளிநாட்டிற்கு நம் நாட்டில் இருந்து தூதுக்குழுவை அனுப்புகிற விஷயம். இந்திய அரசு அதற்குப் பெரு முயற்சி எடுத்து—எல்லா மாநிலங்களில் இருந்தும் திறமையானவர்களைப் பொறுக்கி தூதுக்குழுவில் அமைத்து அனுப்பவேண்டிய ஒன்றாகும். இங்கு இதுபற்றி கேட்கப்பட்ட கேள்விகள் எல்லாம் இந்திய அரசின் கவனத்தைக் கவரும் என்று கருதுகிறேன்.

திரு. சோ. கருணைநாதன் : அப்படிப்பட்ட நல்லெண்ணக் குழு இப்போது தான் வந்திருக்கிறதா? ஏற்கனவே பல குழுக்கள் வந்திருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படிப் பல முறை வந்திருக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : வெளிநாடுகளில் இருந்து இங்கு வருகிற ஹிப்பிகள் போன்றவர்கள் எல். எஸ். டி. மார்சோனா போன்ற போதை தரும் பொருள்களை இங்கே விற்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை எல்லாம் யாரும் விரும்பி வாங்காமல் இருக்க மதுவிலக்கை ஒத்திவைத்திருக்கிறோம்.

Demonstration by Scheduled Caste Students at Madras

*224 *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there was any demonstration by the Scheduled Caste students in Madras City about the 9th February 1971; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 9—2—1971 அன்று அரிசனங்கள், பழங்குடி மக்கள் வகுப்பினரைச் சேர்ந்த சில மாணவர்கள் தலைமைச் செயலகத்தை நோக்கி ஊர்வலம் சென்றனர். அவர்களுடைய பிரதிநிதி அரசுத் தலைமைச் செயலாளரைச்

சந்தித்து, ரூ. 120 பயிற்சி உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று கோரி கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். அரசு அவர்களது முறையீடுகளைக் கவனிக்கும் என்று அரசு தலைமைச் செயலாளர் உறுதியளித்தார்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, அவர்களுடைய விண்ணப்பத்திற்கிணங்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஹரிஜன மாணவர்களுக்கு ஏற்கெனவே உண்டி, உறையுள் போன்றவற்றிற்காக மாதம் ஒன்றுக்கு சென்னையிலே உள்ளவர்களுக்கு 60 ரூபாயும், பிற இடங்களில் 50 ரூபாயும் கொடுக்கப்பட்டு வந்தது. உதவித் தொகை போதவில்லை என்று கோரியதன் பேரில், சென்னையில் உள்ளவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 70 ரூபாயாகவும், பிற இடங்களில் 55 ரூபாயாகவும் உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, மாணவர்களின் போராட்டத்திற்கு சில அரசியல் கட்சிகள்தான் காரணம் என்று சொல்லப்படுகிறதே, அது பற்றிய விவரங்களை அரசு சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரங்களை அரசு சேகரிக்க விரும்பவில்லை. ஆனால் அந்த மாணவர்கள் வந்த ஊர்வலத்திலே எழுப்பிய கோஷங்கள் எல்லாம் அரசியல் உள்ளம் பூசியவைகளாகவே இருந்தன.

Study of Sanskrit.

*225 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government for popularising the study of Sanskrit in this State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இம்மாநிலத்தில் வடமொழி பயில்வதற்காக பதின்மூன்று ஓரியண்டல் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களுக்கான சம்பள மான்யமும், நிர்வாக மானியமும் வழங்கப்படுகின்றன. மேற் கூறிய பள்ளிகளில் படிக்கும் சிறந்த மாணவர்களுக்கு மத்திய அரசின் உதவிப் பணமும் (Scholarships) வழங்கப்படுகிறது.

THIRU K.M. SUBRAMANIAM: Is it a fact that many of the scholarships allotted to the State by the Central Government have lapsed and also whether there is any proposal to start a Sanskrit University, as is being organised in Kerala?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசினுடைய உதவித் தொகை திறமையின் அடிப்படையில் 60 பேர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அது நிறுத்தப்பட்டதாக செய்தி எதுவும் வரவில்லை. அப்படி ஏதாவது செய்திவிவரம் வந்தால் விவரம் தரப்படும். தவிர சமஸ்கிருத கல்லூரி ஒன்று இருந்து வருகிறது. ஆனால் பல்கலைக்கழகம் வைக்கின்ற யோசனைக் குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.